பொருளடக்கம்

1 இஸ்லாமிய அறிவுத்தேடல் சுவனத்திற்கோர் எளிய வழி 7

2 வாழ்க்கையின் நோக்கம் 19

3 இஸ்லாம் கூறும் நற்பண்புகள் 24

4 இஸ்லாமிய ஒழுக்கங்கள் 35

5 இஸ்லாம் கூறும் இல்லறம் 56

6 கணவர் மனைவி உரிமைகள் கடமைகள் 60

7 இஸ்லாமும் தானதர்மமும் 65

8 இஸ்லாமியப் பார்வையில் நன்றி 74

9 இஸ்லாமியப் பார்வையில் பொறுமை 80

10 இஸ்லாம் கூறும் அமைதி 85

11 இஸ்லாமிய மார்க்கத்தில் சமத்துவம் 89

12 பெற்றோரின் உரிமைகள் 92

13 முஸ்லிம்கள் பிற மதத்தவருக்கு ஆற்றவேண்டிய கடமைகள் 97

14 இறுதித்தூதரை உறுதியாகப் பின்பற்றுவதின் முக்கியத்துவம் 104

15 முஹம்மது நபி ﷺ ஒரு மிகச் சிறந்த முன்மாதிரி 108

16 இறுதித்தூதர் முஹம்மதைப் பின்பற்றுங்கள் 115

17 இஸ்லாமிய மார்க்கத்தில் பெண்கள் 120

18 ஹிஜாப் 130

19 முஹம்மது – உலகளாவிய இறைத்தூதர் 140

20 மனிதகுலத்திற்கு நபி முஹம்மது வழங்கியது என்ன? 183

21 இறைத்தூதரின் இறுதிப் பேருரை 188

22 நபித்தோழர்கள் குறித்து இஸ்லாம் 192

23 பிஸ்மில்லாஹ் ஒரு விளக்கம் 197

24 ஹிதாயா எனும் நேர்வழி 202

25 இஸ்லாமிய ஷரீஆ (சட்டவியல்) 207
26 இஸ்லாம் கூறும் வணக்க வழிபாடு 212
27 அல்லாஹ்வின் வழிபாட்டில் அன்பு, அச்சம், ஆதரவு 216
28 குஸ்ல் (கட்டாயக் குளிப்பு) 223
29 வுளூ (அங்கத் தூய்மை) 234
30 உணவுப் பழக்கமும் இஸ்லாமியச் சட்டங்களும் 239
31 அதான் எனும் பாங்கு கூறல் 247
32 தொழுகையின் முக்கியத்துவம் 251
33 தொழுகை - இஸ்லாமின் இரண்டாவது தூண் 254
34 ஜுமுஆ தினம் 261
35 ஈது பெருநாள் தொழுகை 273
36 நோன்பு 276
37 றமளானில் தினசரி செயல்திட்டங்கள் 284
38 றமளான் தொடர்பான கலைச்சொற்கள் 286
39 றமளான் வணக்கங்கள் 295
40 றமளானில் நடக்கும் தவறுகள் 304
41 றமளானும் குழந்தைகளும் 316
42 றமளானும் பெண்களும் 322
43 ஆஷூரா 332
44 ஸகாத் ஓர் இஸ்லாமியக் கடமை 335
45 ஹஜ்ஜு ஓர் இஸ்லாமியத் தூண் 344
46 புறம் பேசுதல் (கீபா) 357

.....



இந்த வடிவில் அறபுச் சித்திர எழுத்துகள் பல வாக்கியங்களின் நடுவே இந்நூலில் காணப்படும். இவை பிரார்த்தனைகளாகும். நல்லோர்களை நினைவுகூரும்போது அவர்களை வாழ்த்தக்கூடிய இஸ்லாமியப் பண்பாட்டைப் பின்பற்றி இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

1

இஸ்லாமிய அறிவுத்தேடல் சுவனத்திற்கோர் எளிய வழி

அல்லாஹ் மனிதனைப் படைத்து அவனுக்கு கேட்கும் திறன், பார்வைத் திறன், அறிவுத்திறன் ஆகியவற்றை வழங்கியுள்ளான். இது ஏன்? ஆம், இவற்றின் வாயிலாகவே மனிதன் தன் அறிவைத் தேடிக்கொள்ள முடியும்.

இஸ்லாம் – அறிவின் சமயம்

இஸ்லாமியச் சமயத்தின் அறிவுரைகள் சுமார் 1400 வருடங்களுக்கு முன்பிருந்து இறைத்தூதர் முஹம்மது ﷺ அவர்கள் வாயிலாக நம்மிடம் வந்துள்ளன. முதன் முறையாக இறைத்தூதருக்கு இறைச்செய்தி இறங்கிய தருணத்திலேயே அறிவுத்தேடலின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுவிட்டது. இறைச்செய்தியின் முதல் வார்த்தையே 'படி' என்பதுதான்.

اقْرَأْ بِاسْمِ رَبِّكَ الَّذِي خَلَقَ

'நபியே, உம்மைப் படைத்த உமது இறைவனின் பெயரைக் கூறி படியுங்கள்' (குர்ஆன் 96:1) என்பதே முதல் வசனம்.

அல்லாஹ் படைத்த முதல் பொருள் எழுதுகோலே என்று நபியவர்கள் கூறியுள்ளார்கள். 'அல்லாஹ் முதலில் எழுதுகோலைப் படைத்து அதற்கு 'எழுது' என்று கட்டளையிட்டான். அது 'எதை எழுத?' என்று கேட்டது. அப்போது அல்லாஹ், 'விதியை எழுது' என்றான். எனவே, எழுதுகோல் நடந்த, நடக்கப்போகின்ற அனைத்தையும் முழுமையாக எழுதிமுடித்தது' என்று நபியவர்கள் கூறினார்கள். (திர்மிதீ 94)

இஸ்லாமில் அறிவு என்பது செயலுக்கும் முன்பு வரக்கூடியது. அறிவின்றி எந்தச் செயலும் இல்லை. எதைச் செய்வதற்கும் முத

லில் அறிவு வேண்டும் என்கிறது இஸ்லாம். ஒரு முஸ்லிம் லா இ லாஹ இல்லல்லாஹ் என்று கூறினாலும் அதைக் குறித்த அறிவுடன் கூற வேண்டும். இதனைக் குர்ஆனின் பின்வரும் வசனத்தில் அல்லாஹ் தெளிவுபடுத்துகிறான்:

فَاعْلَمْ أَنَّهُ لَا إِلَٰهَ إِلَّا اللَّهُ وَاسْتَغْفِرْ لِذَنبِكَ وَلِلْمُؤْمِنِينَ وَالْمُؤْمِنَاتِ وَاللَّهُ يَعْلَمُ مُتَقَلَّبَكُمْ وَمَثْوَاكُمْ

(நபியே!) நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரிய வேறோர் இறைவன் இல்லவே இல்லை என்பதை நீர் உறுதியாக அறிந்து கொண்டு, நீர் உம்முடைய தவறுகளை மன்னிக்கக் கோருவதுடன், அல்லாஹ்வை நம்பிக்கைகொண்ட ஆண்களுக்கும், பெண்களுக்கும் மன்னிப்புக் கோருவீராக! (குர்ஆன் 47:19)

அறிவைத் தேடுவது இறைநம்பிக்கையாளரின் அடையாளம்

கல்வியறிவுதான் ஒரு மூஃமினை, அல்லாஹ்வை நம்பிக்கை கொண்ட மனிதரை ஒரு முனாஃபிக்கிடமிருந்து, அதாவது ஒரு நயவஞ்சகரிடமிருந்து வித்தியாசப்படுத்திக் காட்டுகிறது. நய வஞ்சகனான முனாஃபிக் எப்போதும் தனக்குத் தேவையற்ற விசயங்களில் ஈடுபட்டுக்கொண்டும், பயனற்ற காரியங்களில் நேரத்தை வீணடித்துக்கொண்டும் இருப்பான். இஸ்லாமைப் புரிந்துகொள்கிற விசயத்தில் அவனுக்கு எந்த ஆர்வமும் இருக்காது. ஒரு விசயத்தைக்கூட புரிந்துகொள்ளவும்மாட்டான். ஆகவேதான் அல்லாஹ் இவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'நயவஞ்சகர்கள் விளங்கிக்கொள்ளாதவர்கள்' என்று கூறுகிறான். *(63:7)*

ஒரு மூஃமினைப் பொறுத்த வரை, அவர் அல்லாஹ்வைச் சரியாக நம்பிக்கைகொண்டிருப்பதால் தம்முடைய மார்க்கத்தைக் கற்றுக்கொள்வதில் தொடர்ந்து முயற்சி செய்துகொண்டே இருப்பார். தமக்குப் பலன் தருகின்ற அம்சங்களை அதிலிருந்து கற்றுக் கொண்டே இருப்பார். நல்ல விசயங்கள் எதையும் விட்டுவைக்க மாட்டார். அதில் ஆர்வம் காட்டுவார். அப்படிப்பட்ட சபைகளில் கலந்துகொள்ளவும் தவறமாட்டார்.

இஸ்லாமிய அறிவுத்தேடலின் பாதையானது சுவனத்தின் பாதையாகும். திரும்பத்திரும்பப் படிப்பதும் அதிகம் கற்றுக் கொள்வதும் தஸ்பீஹ் எனும் இறைத்துதியாகும். நமது நபி

நன்மையின் மூலம் தீமையை மாற்றுதல்

அல்லாஹ் குர்ஆனில் ஒருவர் அழகிய முறையில் நடந்துகொள்வதை வலியுறுத்துகிறான்:

وَالَّذِينَ صَبَرُوا ابْتِغَاءَ وَجْهِ رَبِّهِمْ وَأَقَامُوا الصَّلَاةَ وَأَنْفَقُوا مِمَّا رَزَقْنَاهُمْ سِرًّا وَعَلَانِيَةً وَيَدْرَءُونَ بِالْحَسَنَةِ السَّيِّئَةَ أُولَئِكَ لَهُمْ عُقْبَى الدَّارِ

இன்னும், அவர்கள் தங்கள் இறைவனின் முகத்தை நாடி (எத் தகைய துன்பத்தையும்) பொறுமையுடன் சகித்துக்கொள்வார்கள்; தொழுகையையும் முறையாகக் கடைப்பிடிப்பார்கள்; நாம் அவர்களுக்குக் கொடுத்தவற்றை இரகசியமாகவும் வெளிப் படையாகவும் (நல்வழியில்) செலவு செய்வார்கள்; நன்மையைக் கொண்டே தீமையைத் தவிர்த்து விடுவார்கள். இத்தகைய வர்களுக்கு (மறுமையில்) நல்ல முடிவு உண்டு. (குர்ஆன் 13:22)

ادْفَعْ بِالَّتِي هِيَ أَحْسَنُ السَّيِّئَةَ نَحْنُ أَعْلَمُ بِمَا يَصِفُونَ

(நபியே!) தீமையை மிக அழகியதைக் கொண்டே நீர் தடுத்துக் கொள்வீராக! அவர்கள் (உம்மைப் பற்றிக்) கூறுவதை நாம் நன்கறிவோம். (குர்ஆன் 23:96)

وَلَا تَسْتَوِي الْحَسَنَةُ وَلَا السَّيِّئَةُ ادْفَعْ بِالَّتِي هِيَ أَحْسَنُ فَإِذَا الَّذِي بَيْنَكَ وَبَيْنَهُ عَدَاوَةٌ كَأَنَّهُ وَلِيٌّ حَمِيمٌ

நன்மையும் தீமையும் சமமாகிவிடாது. (ஆகவே, நபியே! தீமையை) நீர் மிக அழகியதைக் கொண்டு தடுத்துக்கொள்வீராக! அவ்வாறாயின், உம்முடைய கொடிய எதிரியை அதே சமயத்தில் உம்முடைய உண்மையான, மிக்க நெருங்கிய நண்பனைப்போல் காண்பீர். (குர்ஆன் 41:34)

أُولَئِكَ يُؤْتَوْنَ أَجْرَهُمْ مَرَّتَيْنِ بِمَا صَبَرُوا وَيَدْرَءُونَ بِالْحَسَنَةِ السَّيِّئَةَ وَمِمَّا رَزَقْنَاهُمْ يُنْفِقُونَ

இத்தகையவர்கள் உறுதியாக இருந்ததின் காரணத்தால், இரண்டு தடவைகள் அவர்களுக்கு (நற்)கூலி கொடுக்கப்படும். இத்தகைய வர்கள், தீய செயல்களை நன்மையைக் கொண்டே தடுத்துக் கொள்வார்கள். நாம் அவர்களுக்குக் கொடுத்தவற்றில் இருந்து அவர்கள் தர்மமும் செய்வார்கள். (குர்ஆன் 28:54)

وَجَزَاءُ سَيِّئَةٍ سَيِّئَةٌ مِثْلُهَا فَمَنْ عَفَا وَأَصْلَحَ فَأَجْرُهُ عَلَى اللَّهِ إِنَّهُ لَا يُحِبُّ الظَّالِمِينَ

தீமைக்குக் கூலியாக அதைப் போன்ற தீமையையே செய்வார்கள். (அதற்கு அதிகமாக அல்ல.) எவரேனும் (பிறரின் அநியாயத்தை) மன்னித்து, அவருடன் நல்லிணக்கம் செய்து கொண்டால், அவருடைய கூலி அல்லாஹ்வின்மீது (கடமையாக) இருக்கின்றது. நிச்சயமாக அல்லாஹ் (இதற்கு மாறாக) அநியாயம் செய்பவர்களை நேசிக்கமாட்டான். (குர்ஆன் 42:40)

நற்பண்புகளும் நற்குணமும்

இஸ்லாம் ஓர் அழகிய மார்க்கம். அதில் முழுமையான ஞானமும் அமைதியும் அடங்கியுள்ளது. இந்த அற்புதமான மார்க்கத்தைச் சரியாக பின்பற்றினாலே ஒரு முஸ்லிம் மற்றவர்களுக்கு மகத்தான முன்மாதிரியாக இருப்பார்.

அப்துல்லாஹ் இப்னு அம்ர் ﷺ கூறுகிறார்கள்: நபியவர்கள் எந்தச் சூழ்நிலையிலும் கெட்ட வார்த்தைகளைப் பேசவில்லை. ஆபாசத்தையோ அருவருப்பானதையோ செய்யவில்லை. உங்களில் மிகச் சிறந்தவர்கள் யாரெனில் உங்களில் நற்பண்புகளும் குணங்களும் கொண்டவரே என்று கூறுவார்கள். (புகாரீ)

முஸ்லிமல்லாதவர்களிடம் நீதியாகவும் அன்பாகவும் நடந்துகொள்ளுமாறு அல்லாஹ் கட்டளையிடுகிறான்

لَا يَنْهَاكُمُ اللَّهُ عَنِ الَّذِينَ لَمْ يُقَاتِلُوكُمْ فِي الدِّينِ وَلَمْ يُخْرِجُوكُمْ مِنْ دِيَارِكُمْ أَنْ تَبَرُّوهُمْ وَتُقْسِطُوا إِلَيْهِمْ إِنَّ اللَّهَ يُحِبُّ الْمُقْسِطِينَ

மார்க்க விசயத்தில் உங்களை எதிர்த்து போர் செய்யாதவர்களுக்கும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கும், நீங்கள் அவர்களுக்கு நன்மை செய்வதையும், அவர்களுடன் நீங்கள் நீதியாக நடந்துகொள்வதையும் அல்லாஹ் தடுக்கவில்லை. நிச்சயமாக அல்லாஹ் நீதியாளர்களை நேசிப்பவனாகவே இருக்கின்றான். (குர்ஆன் 60:8)

ஜரீர் இப்னு அப்துல்லாஹ் ﷺ அறிவிக்கிறார்கள்: யார் மனிதகுலத்தின்மீது கருணை காட்டவில்லையோ அவர்கள்மீது அல்லாஹ்வும் கருணை காட்டமாட்டான் என்று நபியவர்கள் கூறினார்கள். (புகாரீ)

முஸ்லிம் எப்போதும் அன்பானவராக, பணிவானவராக, மென்மையானவராக, நேசமிக்கவராக, நற்குணமுள்ளவராக இருக்க வேண்

5

இஸ்லாம் கூறும் இல்லறம்

❁

இஸ்லாம் கூறும் அருள்வளமிக்க உறவுகளில் ஒன்று கணவன் மனைவி உறவாகும். குர்ஆன் திருமண வாழ்வை அழுத்தமாக வலியுறுத்துகிறது. திருமணம் இஸ்லாமியக் கடமைகளில் பாதியை நிறைவேற்றி வைக்கிறது என்பது நபிமொழியின் கருத்தாகும்.

وَمِنْ آيَاتِهِ أَنْ خَلَقَ لَكُمْ مِنْ أَنْفُسِكُمْ أَزْوَاجًا لِتَسْكُنُوا إِلَيْهَا وَجَعَلَ بَيْنَكُمْ مَوَدَّةً وَرَحْمَةً إِنَّ فِي ذَلِكَ لَآيَاتٍ لِقَوْمٍ يَتَفَكَّرُونَ

(நீங்கள் சேர்ந்து வாழக்கூடிய) உங்கள் மனைவிகளை உங்களிலிருந்தே அவன் உற்பத்தி செய்து, நீங்கள் அவர்களிடம் மனஅமைதி பெறுவதற்காக, உங்களுக்கிடையில் அன்பையும் கருணையையும் உண்டுபண்ணி இருப்பதும் அவனுடைய ஆதாரங்களில் ஒன்றாகும். சிந்தித்து உணரக்கூடிய மக்களுக்கு இவற்றில் (ஒன்றில்லை;) நிச்சயமாகப் பல ஆதாரங்கள் இருக்கின்றன. (குர்ஆன் 30:21)

وَأَنْكِحُوا الْأَيَامَى مِنْكُمْ وَالصَّالِحِينَ مِنْ عِبَادِكُمْ وَإِمَائِكُمْ إِنْ يَكُونُوا فُقَرَاءَ يُغْنِهِمُ اللَّهُ مِنْ فَضْلِهِ وَاللَّهُ وَاسِعٌ عَلِيمٌ

(ஆணாயினும், பெண்ணாயினும்) உங்களில் எவருக்கேனும் வாழ்க்கைத் துணை இல்லாவிட்டால், அவர்களுக்கு(ம் விதவைகளுக்கும்) திருமணம் செய்து வையுங்கள். (அது போன்றே) உங்கள் அடிமைகளிலுள்ள நல்லோர்கள் ஆணாயினும் பெண்ணாயினும் சரி (வாழ்க்கைத் துணைவரில்லாத) அவர்களுக்கும் திருமணம் செய்து வையுங்கள். அவர்கள் ஏழைகளாக இருந்தாலும் அல்லாஹ் தன்னுடைய அருளைக்கொண்டு அவர்களுடைய வறுமையை நீக்கி விடுவான். (கொடை கொடுப்பதில்) அல்லாஹ் மிக்க விசாலமானவனும் (மனிதர்களின் நிலைமையை) நன்கறிந்தவனுமாக இருக்கின்றான். (குர்ஆன் 24:32)

8

இஸ்லாமியப் பார்வையில் நன்றி

நன்றி செலுத்துதல் என்பது ஒருவர் நமக்குச் செய்த நன்மையை நாம் மறக்கவில்லை என்று உணர்த்துவதாகும். அவரைக் குறித்து நாம் திருப்தியடைந்திருப்பதை வெளிப்படுத்துவதாகும். 'நன்றி' என்று மனிதர்களிடம் நாம் கூறுவது இதற்காகத்தான். காலம், இடம், மதம் வித்தியாசமின்றி இந்த நன்றி கூறல் பண்பு வெளிப்படுகிறது. யாரும் எங்கிருந்தாலும் அவருடைய மொழியில் நன்றி கூற முடியும். இஸ்லாமிய மார்க்கத்தில் இந்தப் பண்புக்கு மிகவும் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. இது மிகவும் வலியுறுத்தப்படுகிறது.

நம்மில் பெரும்பாலோர் வாழ்க்கையில் பல இன்னல்களைச் சந்திக்கிறோம். மகிழ்ச்சியான தருணமாயினும் துன்பமான நேரமாயினும் எல்லாச் சூழ்நிலைகளிலும் அல்லாஹ்வை நினைவுகூரக் கற்றுக்கொள்வது நம் முன்னுள்ள சவாலாகும். நாம் பலவீனமாக இருந்தாலும், வலிமையாக இருந்தாலும் இரண்டு நிலைகளிலும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தக்கூடியவர்களாக இருக்க வேண்டும். ஒருவர் கேட்கலாம் இப்படி: ஒருவர் ஏழையாக இருக்க, அவர் தமது ஏழ்மை நிலைக்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டுமா?

புரிந்துகொள்ளுங்கள். ஒரு மனிதரின் ஏழ்மைதான் அவர் சந்திக்கும் மிகக் கடினமான சோதனை. அப்போதும் அவர் தமது இறைவனுக்கு நன்றி செலுத்துபவராக இருக்கிறாரா அல்லது நன்றி கெட்டவராக இருக்கிறாரா? அந்த ஏழை அப்போதும் நன்றி செலுத்தும் அடியாராக இருந்தால், அவருக்குரிய சன்மானத்தைப் பின்வருமாறு நபியவர்கள் கூறினார்கள்: செல்வந்தரைவிட அவர் ஐநூறு வருடங்கள் முந்தி சொர்க்கம் சென்றுவிடுவார். *(திர்மிதீ 2351)*

நாம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினால் அவன் தனது அருளை நம்மீது அதிகப்படுத்துவான். அல்லாஹ் கூறுகிறான்:

وَإِذْ تَأَذَّنَ رَبُّكُمْ لَئِنْ شَكَرْتُمْ لَأَزِيدَنَّكُمْ وَلَئِنْ كَفَرْتُمْ إِنَّ عَذَابِي لَشَدِيدٌ

உங்கள் இறைவன் உங்களை நோக்கி, 'நீங்கள் எனக்கு நன்றி செலுத்தினால் நான் என்னுடைய அருளை மேன்மேலும் உங்களுக்கு அதிகப்படுத்துவேன். நீங்கள் (என்னுடைய அருளுக்கு நன்றி செலுத்தாது) மாறுசெய்தால் நிச்சயமாக என்னுடைய வேதனை மிகக் கொடியதாக இருக்கும்' என்று அறிவிப்புச் செய்ததை நபியே நீர் அவர்களுக்கு நினைவுபடுத்துவீராக. (குர்ஆன் 14:7)

அதே சமயம் அல்லாஹ் நமது நன்றியின் பக்கம் தேவையுள்ளவனாகவும் இல்லை. நாம் நன்றி செலுத்தினால் நமக்குத்தான் நன்மை. அதைப் பின்வருமாறு அல்லாஹ் கூறுகிறான்:

وَلَقَدْ آتَيْنَا لُقْمَانَ الْحِكْمَةَ أَنِ اشْكُرْ لِلَّهِ وَمَنْ يَشْكُرْ فَإِنَّمَا يَشْكُرُ لِنَفْسِهِ وَمَنْ كَفَرَ فَإِنَّ اللَّهَ غَنِيٌّ حَمِيدٌ

லுக்மானுக்கு நாம் ஞானத்தைக் கொடுத்து அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும்படி கூறினோம். ஏனென்றால், எவர் நன்றி செலுத்துகிறாரோ அவர் தம் நன்மைக்காகவே நன்றி செலுத்துகிறார். எவன் அல்லாஹ்வை (நிராகரித்து, அவனுக்கு நன்றி செலுத்துவதை) மறுக்கிறானோ (அவன் தனக்குத் தீங்கு தேடிக் கொள்கிறான். அதனால், அல்லாஹ்வுக்கு ஒன்றும் நஷ்டமில்லை. ஏனென்றால்,) நிச்சயமாக அல்லாஹ் தேவையற்றவனும் புகழுடையவனுமாக இருக்கின்றான். (குர்ஆன் 31:12)

தன்னுடைய அடியார்கள் அவனை நினைவுகூர்ந்து அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்த வேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிடுகிறான். அல்லாஹ் கூறுகிறான்:

فَاذْكُرُونِي أَذْكُرْكُمْ وَاشْكُرُوا لِي وَلَا تَكْفُرُونِ

நீங்கள் என்னை நினைத்துக்கொண்டே இருங்கள். நானும் உங்களை நினைத்து (அருள்புரிந்து) வருவேன். நீங்கள் எனக்கு நன்றி செலுத்தி வாருங்கள்; எனக்கு மாறு செய்யாதீர்கள். (குர்ஆன் 2:152)

அபூஸைது ﷺ அவர்கள் வழியாக அறிவிக்கும் நபிமொழி ஒன்றில், 'யார் மனிதர்களிடம் நன்றி செலுத்தவில்லையோ அவர் அல்லாஹ்வுக்கு ஒருபோதும் நன்றி செலுத்தியவராகமாட்டார்' என்று கூறப்படுகிறது. (திர்மிதீ 1955; அபூ தாவூது 4811)

11

இஸ்லாமிய மார்க்கத்தில் சமத்துவம்



சமத்துவம் என்பதற்கு அகராதியில் சமமாக நடத்துதல் என்று எழுதப்பட்டுள்ளது. குறிப்பாக, உரிமைகள், அந்தஸ்துகள், வாய்ப்புகள் ஆகியவற்றில் சமத்துவம் கவனிக்கப்படுகிறது. இஸ்லாமிய மார்க்கத்தின் அடிப்படைகளில் ஒன்று சமத்துவமாகும். ஆனால், இதனை இன்றைய பிற்போக்குத்தனமான கண்ணோட்டத்தில் புரிந்துகொள்ள முயற்சி செய்யக் கூடாது. அல்லாஹ்வின் பார்வையில் எல்லா மக்களும் அவர்கள் மனிதர்கள் எனும் நிலையில் சமமானவர்களே என்கிறது இஸ்லாம். ஆனால், ஒவ்வொருவரின் திறமைகள், ஆளுமைகள், இலட்சியங்கள், செல்வம் ஆகிய பல விசயங்களில் அவர்களுக்கு மத்தியில் வேறுபாடுகள் உள்ளன.

முக்கியத்துவம்

சமத்துவத்தின் முக்கியத்துவத்தை எளிதாகச் சொல்வதென்றால் மனிதர்கள் அனைவருக்கும் ஒருவர்மீது மற்றவருக்கு ஒரே மாதிரியான உரிமைகள் இருப்பதாகும் என்று கூறலாம். இதில் எந்த வேறுபாடும் இருக்கக் கூடாது. நிறம், இனம், மொழி, ஆணா பெண்ணா, குழந்தையா என்று எந்த வேறுபாடும் இல்லாமல் எல்லோருக்கும் எங்கிருந்தாலும் உரிமைகள் இருப்பதே சமத்துவம்.

இஸ்லாமைப் பொறுத்தவரை எந்தத் தனி நபரையும் அவருடைய இனம், நிறம், மொழி இவற்றைக்கொண்டு பாகுபடுத்துவதில்லை. அவருடைய இறையச்சம் எப்படி, அதன் தரம் என்ன என்பதை மட்டுமே கவனிக்கிறது.

குர்ஆன் பார்வை

يَا أَيُّهَا النَّاسُ إِنَّا خَلَقْنَاكُمْ مِنْ ذَكَرٍ وَأُنْثَى وَجَعَلْنَاكُمْ شُعُوبًا وَقَبَائِلَ لِتَعَارَفُوا
إِنَّ أَكْرَمَكُمْ عِنْدَ اللَّهِ أَتْقَاكُمْ إِنَّ اللَّهَ عَلِيمٌ خَبِيرٌ

மனிதர்களே! உங்கள் அனைவரையும் நிச்சயமாக நாம் ஒரே ஆண், ஒரே பெண்ணிலிருந்துதான் படைத்தோம். பின்னர், ஒருவர் மற்றவரை அறிந்துகொள்ளும் பொருட்டு, உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். (ஆகவே, உங்களில் ஒருவர் மற்றவரைவிட மேலென்று பெருமை பாராட்டிக் கொள்வதற்கில்லை.) எனினும், உங்களில் எவர் இறையச்சம் உடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். (குர்ஆன் 49:13)

இஸ்லாம் ஒரு நீதியின் மார்க்கம். அல்லாஹ் கூறுகிறான்:

إِنَّ اللَّهَ يَأْمُرُكُمْ أَنْ تُؤَدُّوا الْأَمَانَاتِ إِلَى أَهْلِهَا وَإِذَا حَكَمْتُمْ بَيْنَ النَّاسِ أَنْ تَحْكُمُوا بِالْعَدْلِ

உங்கள் பொறுப்பில் நம்பி ஒப்படைக்கப்பட்ட (அமானிதப்) பொருள்களை அவற்றின் சொந்தக்காரர்களிடமே நீங்கள் (திரும்பவும் நேர்மையாக) ஒப்படைத்துவிடும்படியும், மனிதர்களுக் கிடையில் நீங்கள் தீர்ப்புக் கூறினால் (பாரபட்சமின்றி) நீதியாகவே தீர்ப்பளிக்கும்படியும் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகின்றான். (குர்ஆன் 4:58)

அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறினார்கள்: மனிதர்களே, உங்கள் இறைவன் ஒருவனே. உங்கள் தந்தையும் ஒருவரே. நீங்கள் அனைவரும் ஆதமிலிருந்து வந்தவர்கள். ஆதமோ மண்ணிலிருந்து படைக்கப்பட்டவர். உங்களில் அல்லாஹ்வின் பார்வையில் மிகவும் கண்ணியத்திற்குரியவர் உங்களில் இறையச்சம் உடையவரே. அறபி அல்லாதவரைவிட அறபிக்கு மொழியால் எந்த மேன்மையும் வந்துவிடாது. கருப்பரைவிட வெள்ளையருக்கு நிறத்தால் எந்த மேன்மையும் வந்துவிடாது. உங்களின் இறையச்சமே உங்களை மேன்மைப்படுத்தும். (அஹ்மது 22978)

நபியவர்களிடம், மனிதர்களில் அல்லாஹ்விடம் மிகவும் கண்ணியத்திற்குரியவர் யார் என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள், 'எந்த மனிதர் மக்களிடம் மிகவும் நல்லவிதமாக நடந்துகொள்கிறாரோ அவரே கண்ணியத்திற்குரியவர்' என்று கூறினார்கள். (அத்தபரானீ அல்மகாசித் அல்ஹசனா 200-201)

17

இஸ்லாமிய மார்க்கத்தில் பெண்கள்

❁

இஸ்லாமிய மார்க்கத்தில் பெண் என்பவள் முழுமையாக சுயமுடிவு களை எடுக்குமளவு உரிமை பெற்ற ஆளுமை ஆவாள். அவள் தனது பெயரில் ஒப்பந்தங்கள் செய்யலாம், மரண சாசனம் எழுதி வைக்கலாம். ஒரு தாயாக, மனைவியாக, சகோதரியாக, மகளாக தனது வாரிசுச் சொத்துக்கு உரிமை கோரலாம். முழு சுதந்திரத்துடன் தனது கணவரைத் தேர்வு செய்யலாம். அறபுலகின் அறியாமைக்கால சிலை வணங்கி மக்கள் பெண் குழந்தைகளை உயிரோடு புதைத்து வந்தார்கள். அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் அந்த வழக்கத்தைக் கடுமையாக எதிர்த்து வந்தார்கள். பெண் குழந்தைகளைப் பராமரித்து வளர்த்தால் அவர்கள் தம் பெற்றோர்களுக்கு நரகத்தை விட்டுக் காக்கும் திரையாக இருப்பார்கள் என்றார்கள்.

ஒரு முறை ஆயிஷா ؓ அவர்களின் வீட்டிற்கு ஒரு தாயும் இரண்டு மகள்களும் வந்தனர். தாயானவள் ஆயிஷாவிடம் தர்மம் கேட்டாள். அப்போது ஆயிஷாவிடம் ஒரு பேரீச்சம் பழம் தவிர வேறில்லை. அதை அவர்கள் அத்தாயிடம் கொடுத்தார்கள். அவள் அதை இரண்டாக ஆக்கி தம் மகள்கள் இருவருக்கும் கொடுத்துவிட்டாள். அவள் சாப்பிடவே இல்லை. பிறகு, அவ்விடத்திலிருந்து எழுந்து தம் மகள்களுடன் வெளியேறிவிட்டாள். நபியவர்கள் வீட்டிற்கு வந்தவுடன் ஆயிஷா இவ்விசயத்தை அவர்களிடம் கூறினார்கள். அதற்கு நபியவர்கள், அந்தத் தாய் தனது இரண்டு மகள்களுடன் மறுமைநாளில் வருவாள். அப்போது அவளின் மகள்கள் நரக நெருப்பை விட்டு அவளைக் காக்கும் திரையாக இருப்பார்கள்' என்று கூறினார்கள். *(அல்அதபுல் முஃப்ரத் 132)*

பெண்ணின் அந்தஸ்து

இஸ்லாமிய மார்க்கத்தில் பெண்ணின் அந்தஸ்து மிகவும் கண்ணி யமும் உயர்வும் கொண்டது. ஒவ்வொரு முஸ்லிமின் வாழ்க்கையி

லும் அவளின் தாக்கம் மகத்தானது. முஸ்லிம் பெண் அல்லாஹ்வின் வேதமான குர்ஆனிலிருந்தும் அவனுடைய தூதர் ﷺ அவர்களின் வழிமுறையிலிருந்தும் நேர்வழியைப் பெற்றுக்கொண்டால், அவள்தான் ஒரு நல்ல சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதற்கான ஆரம்பக்கட்ட ஆசிரியர்.

ஒவ்வொரு முஸ்லிம் ஆணும் பெண்ணும் குர்ஆன், நபிவழியைப் பற்றிப்பிடித்தால் எந்த விசயத்திலும் வழிதவறமாட்டார். இன்று பல சமுதாயங்கள் வழிகெட்டு இன்னல்களுக்கு ஆளாவதின் ஒரே காரணம், அவர்கள் அல்லாஹ்வின் பாதையை விட்டுத் தரம்புரண்டதுதான். அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அவனோ முஸ்லிம்களுக்கு நேர்வழியின் மூலம் வழிகாட்டினான். நபியவர்கள் கூறினார்கள்: நான் உங்களிடம் இரண்டு விசயங்களை விட்டுச் செல்கிறேன். அவற்றைப் பற்றிப்பிடிக்கும் காலமெல்லாம் நீங்கள் வழிதவறவே மாட்டீர்கள். அல்லாஹ்வின் வேதமும் எனது வழிமுறையுமே அவை. (முவத்தா இமாம் மாலிக், ஸஹீஹா 1871)

முஸ்லிம் பெண்ணுக்கு மகத்தான முக்கியத்துவம் இருப்பதற்குக் காரணம் அவளின் உரிமைகளும் கடமைகளும்தான். ஒரு மனைவியாக, சகோதரியாக, மகளாக, தாயாக அவளின் பங்கு மகத்தானது. அதைக் குறித்து குர்ஆனிலும் நபிவழியிலும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. அவளின் பொறுப்புகளும் கடமைகளும் மிகப் பெரியவை. அவற்றில் சில கடினமானவை. ஆண்கள்கூட தாங்கமாட்டார்கள். ஆகவேதான் மனிதன் தன் தாய்க்கு மிகவும் நன்றியுள்ளவனாக, அவளிடம் அன்பும் நட்பும் கொண்டவனாக இருக்க வேண்டும் என்று இஸ்லாம் கட்டாயமாக்கியுள்ளது. அவளுடைய உயர்ந்த அந்தஸ்திற்குப் பின்னணியில் உள்ள இரகசியம் இது. தந்தைக்கு இருக்கும் மகத்துவத்தைவிட மகத்துவமானது அவளின் மகத்துவம்.

அல்லாஹ் கூறுகிறான்:

وَوَصَّيْنَا الْإِنْسَانَ بِوَالِدَيْهِ حَمَلَتْهُ أُمُّهُ وَهْنًا عَلَى وَهْنٍ وَفِصَالُهُ فِي عَامَيْنِ
أَنِ اشْكُرْ لِي وَلِوَالِدَيْكَ إِلَيَّ الْمَصِيرُ

தன் தாய் தந்தைக்கு நன்மை செய்யும்படி மனிதனுக்கு நாம் அறிவுரை கூறியுள்ளோம். அவனுடைய தாய் துன்பத்தின் மேல் துன்பத்தை அனுபவித்து(க் கர்ப்பத்தில்) அவனைச் சுமந்து கொண்டலைந்தாள். (பிறந்த) பிறகும் இரண்டு ஆண்டுகளுக்குப்

18

ஹிஜாப்



ஹிஜாப் என்றால் அறபுமொழியில் திரை, தடுப்பு, மறைப்பு எனப் பொருள். நாணம், தன்னடக்கம் என்பதை குர்ஆன் ஆண், பெண் இரு சாராருக்கும் பொதுவாக ஆக்கியுள்ளது. நடை உடை பாவனைகள், பார்வைகள், கற்பைப் பேணுதல் ஆகிய அனைத்திலும் இவர்கள் நாணத்தையும் தன்னடக்கத்தையும் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறது. பார்வையைத் தாழ்த்திக்கொள்கிற சட்டம் பெண்களைக் காட்டிலும் ஆண்களுக்கு முதலில் சொல்லப்பட்டுள்ளது. முஸ்லிம்களைப் பொறுத்தவரை இந்த உலக வாழ்க்கையின் ஒரே நோக்கம் அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்து அவனையே வணங்கி வாழ்வதுதான். அவனும் அவனுடைய தூதர் முஹம்மது ﷺ அவர்களும் என்ன கட்டளையிட்டுள்ளார்களோ அதன்படி வாழ்வதே வணக்கமாகும். ஹிஜாப் எனும் வழிமுறை அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிவதை வெளிப்படுத்துவதாகும். அல்லாஹ் கூறுகிறான்:

وَمَا كَانَ لِمُؤْمِنٍ وَلَا مُؤْمِنَةٍ إِذَا قَضَى اللَّهُ وَرَسُولُهُ أَمْرًا أَنْ يَكُونَ لَهُمُ الْخِيَرَةُ مِنْ أَمْرِهِمْ وَمَنْ يَعْصِ اللَّهَ وَرَسُولَهُ فَقَدْ ضَلَّ ضَلَالًا مُبِينًا

அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் ஏதேனும் ஒரு விசயத்தைப் பற்றிக் கட்டளையிட்ட பின்னர், அந்த விசயத்தில் (அதனை விட்டு) வேறு அபிப்பிராயம்கொள்வதற்கு அல்லாஹ்வை நம்பிக்கைகொண்ட எந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிமையில்லை. (இவ்விசயத்தில்) அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் எவரேனும் மாறு செய்தால், நிச்சயமாக அவர்கள் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருக்கிறார்கள். (குர்ஆன் 33:36)

குர்ஆன் பெண்களுக்கு ஹிஜாபைக் கடமையாக்கி அது அவர்களைக் கண்ணியமிக்கவர்களாகவும், நாணமுள்ளவர்களாகவும் அறியப்படச் செய்து அவர்களைத் தொல்லைகளிலிருந்து பாதுகாக்கும் என்றும் கூறுகிறது. நாணம் என்பது இறைநம்பிக்கையின்

அடையாளம். யாருக்கு நாணம் இல்லையோ அவருக்கு எந்த மார்க்கமும் இல்லை. ஹிஜாப் பெண்களைச் சிறுமைப்படுத்துவதில்லை. மாறாக, அவர்களுக்குப் பாதுகாப்பை வழங்கி அவர்களின் நாணத்தையும் கற்புணர்வையும் பெருமைப்படுத்துகிறது. ஒருவரை ஒருவர் மதித்து நடக்கும் பண்பை வளர்க்கிறது. அதன் வாயிலாக ஓர் அமைதி நிலவுகிற சமுதாயத்தை உருவாக்குகிறது.

இஸ்லாமியப் பொருள்

ஹிஜாப் என்றால் மறைத்தல், திரையிடுதல் எனப் பொருள். இக்கருத்தில் அல்லாஹ்வும் குர்ஆனில் இந்த வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளான்.

وَمَا كَانَ لِبَشَرٍ أَنْ يُكَلِّمَهُ اللَّهُ إِلَّا وَحْيًا أَوْ مِنْ وَرَاءِ حِجَابٍ أَوْ يُرْسِلَ رَسُولًا فَيُوحِيَ بِإِذْنِهِ مَا يَشَاءُ

அல்லாஹ் (நேருக்கு நேராய்ப்) பேசுவதற்குரிய தகுதி மனிதர்களில் ஒருவருக்குமில்லை. எனினும், வஹ்யி மூலமாகவோ, திரைக்கு அப்பாலிருந்தோ, ஒரு (வானவத்) தூதரை அனுப்பி வைத்து வஹ்யி மூலமாகவோ தனக்கு விருப்பமான கட்டளையை (மனிதனுக்கு) அறிவிக்கின்றான். (குர்ஆன் 42:51)

وَإِذَا قَرَأْتَ الْقُرْآنَ جَعَلْنَا بَيْنَكَ وَبَيْنَ الَّذِينَ لَا يُؤْمِنُونَ بِالْآخِرَةِ حِجَابًا مَسْتُورًا

(நபியே!) நீர் குர்ஆனை ஓத ஆரம்பித்தால் உமக்கும் மறுமையை நம்பாதவர்களுக்கும் இடையில் தடுப்பாக இருக்கக்கூடிய ஒரு திரையை நாம் ஏற்படுத்திவிடுகிறோம். (குர்ஆன் 17:45)

وَقُلْ لِلْمُؤْمِنَاتِ يَغْضُضْنَ مِنْ أَبْصَارِهِنَّ وَيَحْفَظْنَ فُرُوجَهُنَّ وَلَا يُبْدِينَ زِينَتَهُنَّ إِلَّا مَا ظَهَرَ مِنْهَا وَلْيَضْرِبْنَ بِخُمُرِهِنَّ عَلَى جُيُوبِهِنَّ وَلَا يُبْدِينَ زِينَتَهُنَّ إِلَّا لِبُعُولَتِهِنَّ أَوْ آبَائِهِنَّ أَوْ آبَاءِ بُعُولَتِهِنَّ أَوْ أَبْنَائِهِنَّ أَوْ أَبْنَاءِ بُعُولَتِهِنَّ أَوْ إِخْوَانِهِنَّ أَوْ بَنِي إِخْوَانِهِنَّ أَوْ بَنِي أَخَوَاتِهِنَّ أَوْ نِسَائِهِنَّ أَوْ مَا مَلَكَتْ أَيْمَانُهُنَّ أَوِ التَّابِعِينَ غَيْرِ أُولِي الْإِرْبَةِ مِنَ الرِّجَالِ أَوِ الطِّفْلِ الَّذِينَ لَمْ يَظْهَرُوا عَلَى عَوْرَاتِ النِّسَاءِ وَلَا يَضْرِبْنَ بِأَرْجُلِهِنَّ لِيُعْلَمَ مَا يُخْفِينَ مِنْ زِينَتِهِنَّ وَتُوبُوا إِلَى اللَّهِ جَمِيعًا أَيُّهَ الْمُؤْمِنُونَ لَعَلَّكُمْ تُفْلِحُونَ

(நபியே!) அல்லாஹ்வை நம்பிக்கைகொண்ட பெண்களுக்கும் நீர் கூறும்: அவர்களும் தங்கள் பார்வைகளைக் கீழ்நோக்கியே வைக்க வேண்டும்; தங்கள் கற்புகளையும் பாதுகாத்துக்கொள்ள

24

ஹிதாயா எனும் நேர்வழி

❁

வரைவிலக்கணம்

ஹிதாயா என்றால் ஒருவரை உண்மையான, நேரான பாதையின் பக்கம் வழிகாட்டுவதாகும்.

குர்ஆனுடைய பார்வை

குர்ஆன் நேர்வழி காட்டும் புத்தகம். (2.185) மனிதகுலத்திற்கு நபி முஹம்மது ﷺ அவர்கள் வழியாக இறக்கப்பட்டது. இந்த உலக முடிவு நாள் வரை அது நிலைக்கும்.

ஹிதாயா (நேர்வழி) என்பது அல்லாஹ்வின் கையில்தான் இருக்கிறது. நபியவர்களின் கையில் அது இல்லை. நபியவர்கள் தாம் நாடியவர்களை நேர்வழி செலுத்திவிட முடியாது. அவர்களின் பொறுப்பு அல்லாஹ்வின் தூதுச்செய்தியை எடுத்துரைத்து விளக்கம் தருவதுதான். யாரையும் நிர்ப்பந்தித்து பின்பற்றச் செய்ய முடியாது. அல்லாஹ் கூறுகிறான்:

وَلَوْ شَاءَ رَبُّكَ لَآمَنَ مَنْ فِي الْأَرْضِ كُلُّهُمْ جَمِيعًا أَفَأَنْتَ تُكْرِهُ النَّاسَ حَتَّىٰ يَكُونُوا مُؤْمِنِينَ

உம்முடைய இறைவன் நாடியிருந்தால், பூமியிலுள்ள அனைவருமே அல்லாஹ்வை நம்பிக்கைகொண்டவர்களாகி விடுவார்கள். எனவே, மனிதர்கள் (அனைவருமே) அல்லாஹ்வை நம்பிக்கைகொண்டவர்களாகிவிட வேண்டுமென்று அவர்களை நீர் கட்டாயப்படுத்த முடியுமா? (குர்ஆன் 10:99)

وَمَا عَلَى الرَّسُولِ إِلَّا الْبَلَاغُ الْمُبِينُ

அவர் நம்முடைய தூதை (மக்களுக்கு)ப் பகிரங்கமாக எடுத்துரைப்பதைத் தவிர (அவர்களைக் கட்டாயப்படுத்துவது) அத்தூதர்மீது கடமையில்லை. (குர்ஆன் 29:18)